இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 297 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 24 – சனிக்கிழமை 07 ஜுன் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 297 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 24 - Saturday 07 June 2025 - Chennai 12 Pages ₹ 5.00






முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (6.6.2025) சென்னை – தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (என்ற) கவிஞர் சல்மா ஆகியோர் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான பி. சுப்பிரமணியனிடம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்களவை கழகக் குழுத்தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.ராஜேந்திரன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைவர் பெ. சண்முகம், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இந்திய தேசிய முஸ்லிம் லீக் சார்பில் அபூபக்கர், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணைய முன்னாள் தலைவர் வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும்

# கழக வேட்பாளர்கள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல்!

## கழக ஆதரவுடன் மக்கள் நீதி மய்யத் தலைவர் - கலைஞானி கமல்ஹாசன் வேட்பு மனு!

**சென்னை, ஜுன் 7-**

**மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் - மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா ஆகியோர் நேற்று, தலைமைச் செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் வேட்பு மனுக் களைத் தாக்கல் செய்தனர்.**

**கழக ஆதரவுடன் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிடும், அதன் தலைவர் கலைஞானி கமல்ஹாசனும், நேற்று (6.6.2025) முதல்வர் அவர்கள் முன்னிலையில் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களாக பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (6.6.2025) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப் பேரவை கூடுதல் செயலாளருமான பி. சுப்பிரமணியனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முகமது அபுபக்கர், சட்டமன்ற உறுப்பினர் தி. இராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது. இந்நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

சென்னை தலைமைச்செயலகத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அலுவலரான சட்டப் பேரவை கூடுதல் செயலாளர் சுப்பிரமணியத்திடம், தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதேபோன்று, தி.மு.க. சார்பில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட மாநிலங்களவை இடத்தில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் கலைஞானி கமல்ஹாசனும் நேற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்களவை தி.மு.க. குழுத்தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர். பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.ராஜேந்திரன், பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப் பெருந்தகை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைவர் பெ. சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் முகமது அபூபக்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தி.இராமச்சந்திரன், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணைய முன்னாள் தலைவர் வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைய உள்ள நிலையில், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஜுன் 10ஆம் தேதி நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

### இஸ்லாமியர்களின் சமூக - கல்வி - பொருளாதார உரிமைகளுக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் சகோதர உணர்வோடு

# இஸ்லாமிய மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த ‘பக்ரீத்’ திருநாள் நல்வாழ்த்துகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜுன் 7-**

**இஸ்லாமியப் பெருமக்கள் ‘தியாகத் திருநாள்’ எனக் கொண்டாடும் ‘பக்ரீத்’ திருநாள் இன்று!**

**இந்நாளில் இஸ்லாமியர்களுக்கு தமது வாழ்த்தினைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**அவ்வாழ்த்துச் செய்தியில், முதல்வர் அவர்கள்,**

**“இஸ்லாமிய மக்களின் சமூக - கல்வி - பொருளாதார உரிமைகளுக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் சகோதர உணர்வோடு, இஸ்லாமிய மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த ‘பக்ரீத்’ திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பக்ரீத் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

தியாகத்தையும் பகிர்ந்துண்ணும் பண்பையும் போற்றும் பக்ரீத் திருநாளைக் கொண்டாடிடும் இஸ்லாமியச் சகோதரர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

இஸ்லாமியர்களின் இருபெரும் திருநாள்களில் ஒன்று பக்ரீத். புத்தாடை உடுத்தி, உணவினை வறியவர்க்கு ஒரு பகுதியையும், நண்பர்களுக்கு ஒரு பகுதியையும் பகிர்ந்தளித்துக் கொண்டாடும் பெருநாள்.

இஸ்லாமிய மக்களுக்காக இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை, நங்க நல்லூரில் ‘ஹஜ் இல்லம்’ என அவர்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாடு மற்றும் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றும் சகோதர உணர்வோடு அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் எனது அன்பான பக்ரீத் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### காணொலிக் காட்சி வாயிலாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் கூட்டம்”** இன்று (07-06-2025 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : உறுப்பினர் சேர்க்கை**



**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018